புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 December 2023 ISSN: 2456-821X

================================================================================

# சங்க இலக்கியங்களில் பண்பாட்டு கூறுகள்

முனைவர் **பொ.சுரேஷ்**
உதவிப் பேராசிரியர்
மெய்யியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

================================================================================

உலக மொழிகளில் மிக தொன்மை பழைமை வாய்ந்தது தமிழ் மொழியாகும். அவற்றிற்கான காரணம் நமது சங்க இலக்கிய, இலக்கண நூல்கள் என்றால் அது மிகையில்லை. நமக்கு கிடைத்த சங்க கால முதல்நூல் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும், அவ்வாறு கிடைக்கப்பெற்ற தொல்காப்பியத்தில் இலக்கணம் மட்டும் கூறாது சங்க இலக்கியத்திற்கு முன்னதாக வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியல் முறை, பழக்க வழக்கங்கள், அழகுக்கலைகள், மானுடப்பண்பு, மொழித்திறன், அறிவியல் சிந்தனைகள் போன்றவற்றை பதிவு செய்துள்ள காலப்பெட்டகமா விளங்குகின்றது. மேலும், தொல்காப்பியத்திற்கு முன்னர் இருந்த இலக்கண இலக்கிய வகைகள் குறித்து குறிப்பிடுவதிலிருந்து தமிழர்கள் எத்தகைய மொழித்திறன் மிககவர்களாக இருந்தனர் என்பதையும் பல இலக்கியங்கள் இருந்தமையால் பல இலக்கண வகைகள் பற்றிய அறிவும் கொண்டிருந்தமையைக் காணலாம். இத்தகைய பெருமை வாய்ந்த சங்க இலக்கிய நூல்கள் மானுட மேன்மைக்கும் உலக மேன்மைக்காகனதாகவும் இருந்து வருகின்றன. அவ்வகையில் தமிழர்கள் பின்பற்றிய பழக்க வழக்கங்கள் பின்னாளில் அவர்தம் இலக்கியங்களில் பண்பாடாகவும் நாகரீகமாகவும் கலாச்சாரமாகவும் வெளிப்பட்டு உலகில் மேன்மையுற்று விளங்குகிறது. இத்தகையப் பின்னணியில் தமிழர்தம் பண்பாடு,நாகரீகம்,காலச்சாரம் போன்றவை சங்க இலக்கியங்களில் சிறப்புற்று விளங்குவதை ஆய்வதாக இக்கட்டுரை அமையும்.

கலைச்சொற்கள்

பண்பாடு,மெய்யறிவு,நெறி,அறம்,வெள்ளணி விழா,கல் எடுப்பு,காதல், வீரம் போர் நெறி,உயிரிரக்கம்,மனிதநேயம்,இறைக்கொள்கை,அறிவியல்

## முன்னுரை

உலகில் காணப்படுகின்ற பல்வேறு இனக்குழுவிற்கும் இல்லாத சிறப்பு பண்புகள் வளர்சியடைந்து தமிழர் பண்பாடாக உருவெடுத்தது. தமிழர்கள் தங்களுடைய இயல்பான எளிய வாழ்வியல் முறையில் அனைத்து விதமான வாழ்வியல் நெறிகளையும் ஒழுக்கங்களையும் பழக்க

வழக்கங்களாகப் பின்பற்றி தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் நெறிகளைக் கூறியுள்ளனர். சங்க கால தமிழர்கள் தம் செம்மார்ந்த வாழ்வியல் முறைகளை அகம்,புறம் என இரண்டாக வகுத்து, அறம்,பொருள்,இன்பம்,வீடுபேறு என்னும் நால்வகைக் கொள்கைகளை அடிப்படியடையாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளான். தான் கடைபிடித்த வாழ்வியல் முறைகளை பொதுவில் வைத்து உலகை வழிநடத்தும் பண்பாடாக மனித குலமேம்பாட்டிற்கு அளித்துள்ளான். தான் மேற்கொள்ளும் எசத்தகையச் செயலிலும் அறம் சார்ந்த கருத்துக்களை முன்வைத்தே செய்துள்ளமையை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.

பண்பாடு

மனிதன் முழு நிறைவே அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாக அமைவது பண்பாடு. முழு நிறைவான வாழ்க்கை இனிமையும் ஒளியும் உடையதாக அமையும். தனி மனிதனுடைய உணர்வுகளும் செயல்களும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சிகள் ஒரு நிலை. தனி மனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதால் உருவாகும் சமூகங்களின் பண்பட்ட முன்னேற்றம் மற்றொரு நிலை. சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாக பின்னிப்பிணைந்து இயங்கும் பொழுது உருவாகும் வாழ்க்கை நெறி பழக்க வழக்கங்கள், கலை உணர்வு, சிந்தனை முதிர்ச்சி ஆகிய அனைத்தும் இணைந்து ஒரு வகை சமுதாய சிந்தனையாக வெளிப்படுவதே பண்பாடு என்பது மூன்றாவது நிலை என பண்பாட்டை படிநிலைகளாக் கூறுவர். இவ்வகை நிலையிலும் முதன்மை இடம் பெறுவது மனிதனுடைய உள்ளத்து உணர்வுகள். அவை பண்பட்டு, பதப்பட்டு, செம்மை நலமுறுவதே பண்பாடாகும்.

ஒரு இனத்தின் தொடர்ச்சியாகவும் தொன்றுதொட்டும் மேற்கொண்டுவரும் பழக்க வழக்கமானது நாளடைவில் பன்பாடு என்ற நிலையின் அடைகிறது, அவ்வாறு பாண்பாடாகிய நெறியானது அவ்வினத்தின் கொள்கைக் கோட்பாடாகவும் உண்மைத்தன்மையான நாகரீகம்,கலாச்சாரம் என மாற்றம் பெறுகின்றது. இத்தகையப் பின்னணியில் தமிழர்கள் மேற்கொண்ட பண்பாடுச் சிந்தனைகள் தனிமனித மேம்பாட்டிற்கும்,சமூகத்திற்கும் உறுதுணையாக அமைந்தன என்பதையும், இப்பண்பாட்டு சிந்தனை உலகில் உள்ள அனைவருக்கும் பொதுத்தன்மையாக அமைந்துள்ளமையைப் பற்றி சங்க இலக்கியங்களின் பாடல் வழிக் காண்போம்.

மானுடப்பொதுடமை

மனிதர்கள் வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்பதைத்தான் உலகம் முழுவதும் உள்ள அறிஞர்கள் கூறுகிறார்கள். இதற்கு நாடு போன்ற எல்லைகளும் இருக்கக்கூடாது என்ற சிந்தனையும் வலுத்து வருகிறது. இந்த உலகம் அனைவருக்குமானது, இங்கு வாழும் அனைவரும் சமம் என்றும் அனைவரும் உறவினன் என்ற கருத்து உலகம் தழுவிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் எந்த ஒரு படைப்பும், எல்லா மனிதர்களாலும் வரவேற்று போற்றப்படும் என்பதற்கு கீழ்காணும் பாடல் வரியை உதாரணமாக சொல்லலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எல்லா ஊரும் நம்முடைய ஊரே; எல்லா மக்களும் நம்முடைய உறவினர்களே என்று கூறியிருப்பது நமது தமிழ்ப் பண்பாட்டின்பால் எழுந்த சிந்தனையாகும்.

*''யாதும் ஊரே, யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா''* [1]

*மதம்,மொழி,இனம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து மனிதப் பொதுமை காணும் உயர்ந்த லட்சியப் பார்வையை இந்தப் பாடல் வரி எடுத்துரைக்கிறது. இந்தப் பார்வை உலக மனித வரலாற்றில் தனித்துவமான முத்திரை பதித்த சீரிய மனித நேயச் சிந்தனையாகும்.*

இல்வாழ்க்கை

*தன்னலமிக்க மனிதனை பண்படுத்தவும் செம்மைப்படுத்தவும் எழுந்தது இல்வாழ்க்கை. இல்வாழ்க்கையில் தலைவிக்கு முதன்மை இடம் கொடுக்கப் பட்டது. ஒன்றுபட்ட தலைவன் தலைவியினால் அன்பு தழைத்தோங்கியது, இல்லற அறம் செழித்து வளர்ந்தது. இதனை,*

*'சுனைவாய்ச் சிறுநீரை எய்தா தென்(று) எண்ணியப்*
*பிணைமான் இனி துண்ண வேண்டிக்கலைமாத்தன்*
*கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்*
*உள்ளம் படர்ந்த நெறி''* [2]

*சுனையில் சிறிது அளவே நீர் உள்ளது. ஆண் மான் குடிக்கவில்லை என்றால் பெண் மான் குடிக்காது. ஆனால் அங்கு ஒரு மான் குடிப்பதற்கு ஏற்ற அளவிலேயே நீர் உள்ளது. எனவே ஆண் மான் சுனை நீரில் வாயை வைத்துக் குடிப்பது போல பாவனை செய்து பெண் மானைக் குடிக்க வைக்கிறது. இது மனமொத்த தலைவன் தலைவி உள்ளத்தின் நெறியாகவும் இல்லறத்தின் பண்பாகவும் இருப்பதைக் காணலாம்.*

விருந்தோம்பல்

*தமிழர்கள் போற்றும் பண்பாடுகளில் தலையாயது விருந்தோம்பல் பண்பாகும். எளியவர்களுக்கும், சான்றோர்களுக்கும், சொந்தங்களுக்கும் என அனைவருக்கும் விருந்து உபசரிக்கும் பண்பானது பார்போற்றும் பண்பாடாகும். இதனை,*

*'.....உண்கஎன உணரா உயவிற்று ஆயினும்,*
*தங்கனீர் சென்மோ, புலவீர்! நன்றும்;*
*சென்றதற் கொண்டு, மனையோள் விரும்பி,*
*வரகும் தினையும் உள்ளவை எல்லாம்*
*இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்,*
*குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்,*
*குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து,*
*சிறிது புறப்பட்டன்றோ விலளே....* [3]

எனும் இப்பாடலில் ஒரு பெண் தன் வீட்டிற்கு வரும் புலவர்களுக்கு விருந்தோம்பல் செய்தமையாகக் காட்டப்பட்டுள்ளது. ''புலவர் பெருமக்களே! களைப்பு இல்லை என்றாலும் உண்ணுங்கள். இங்குத் தங்கிச் செல்லுங்கள். இல்லத்தில் இருந்த வரகு, தினை ஆகியவை இல்லை என்று கேட்டு வந்தவர்களுக்கு உணவாகவும், கொடையாகவும் வழங்கித் தீர்ந்துவிட்டன. அளவு குறித்து வாங்கி அளவோடு திருப்பித் தரும் குறியெதிர்ப்புப் பெறவும் வழியில்லை. விதைக்காகக் கதிரோடு காயவைத்துப் பாதுகாக்கப்பட்ட தினை உள்ளது'' என்று சொல்லிக்கொண்டு உரலில் போட்டுக் குற்றி எடுத்து உணவாக்கிப் படைப்பாள். உங்களுக்கும் பரிசாகவும் வழங்குகிறேன். மேன்மக்களே குருசில் ஏற்றுக்கொள்ளுங்கள் என வழங்குவாள்.

நிலையாமை

சமூகத்தில் மனிதன் தன்னுடைய பெருமையை நிலைநாட்ட, தன்மன நிலையை சீரக வைத்துக்கொள்ள இந்நிலையாமைப் பண்பு பெரிதும் உதவுகிறது. ஏனெனில், பெயர்,புகழ்,பொருள் போன்ற காரணிகளால் மனிதனிடம் அவ்வொப் பொழுது தான் என்னும் மமதை தலைதூக்கும் அந்த நேரங்களில் நிலையாமைக் கருத்தை எடுத்துக்கூறி, இவ்வுலகில் எதுவும் நிலையானது இல்லை எனக் கூறியவர்கள் நம் முன்னோர்கள். சான்றாக,

'துகள்நீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க;
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்' [4]

குற்றமற்ற அறவழியில் ஈட்டிய பெருஞ்செல்வம் உண்டான காலம் தொடங்கி, எருமைக் கடாக்களைப் பூட்டி உழவு செய்து பெற்ற அப்பொருளைப் பலருடன் சேர்ந்து உண்ணுக! ஏனெனில், செல்வம் யாரிடத்தும் நிலையாக நிற்காமல் வண்டிச் சக்கரம்போல் (மேல்கீழாகவும், கீழ் மேலாகவும்) மாறிவரும் என்று கூறி பொருளின் நிலையாமையை நாலடியார் சுட்டியுள்ளமை நோக்கத்தக்கது.

வீரம்,போர் அறம்

வீரனுக்கு பெருமை தரத்தக்ககூடி பண்புகளில் ஒன்று வீரப்பண்பாகும். வீரம் திருமணத்திற்குரிய முக்கியத் தகுதியாகவும் வீரம் கருதப்பட்டது. வில்லை முறிப்பவர்கள், குறிபார்த்து ஒன்றை வீழ்த்துபவர்கள், காளையை அடக்குபவர்கள், பகைவர் கொண்டு சென்ற மாடுகளை மீட்டு வருபவர்கள் ஆகியோரை விரும்பி மணந்து கொள்ளப் பெண்கள் முன்வந்தனர். இது புறத்தே வரும் பகையைத் தன் போர்த்திறனால் வெல்லுதல், அகத்தே தோன்றும் மன அசைவுகளை, ஆசைகளை, புலன் விருப்பங்களை அடக்கி ஆளுதல் என்பன வீரத்தைக் குறிக்கும். முதலாவது வீரத்தைவிட இரண்டாவது வீரம் பெருமைக்குரியதாக இருந்தது. பழந்தமிழர் வீரப்பண்பாட்டில் குறிப்பிடத்தக்க கூறுகளை குறிப்பிடுவர்.

போரில் எவ்வாறு வோண்டுமானாலும் வெல்லலாம் என்ற நிலையில் போரிலும் அறத்தைப் பின்பற்றிவர்கள் நம்முன்னோர். தனக்குச் சமமானவனோடு மட்டும் போரிடுதல்,முதுகு காட்டுபவனைத் தாக்காமை,மார்பில் வந்து தைத்த வேல் முதுகை ஊடுருவிப் போதல் மானக்கேடு என்று கருதுதல்,போரின்போது மார்பில் புண்பட்டு இறப்பவரே வானஉலகம் செல்ல முடியும் என்ற நம்பிக்கை போன்ற அறநெறிச் சிந்தனையயை வகுத்துக்கொண்ணவர்கள். மேற்கண்ட கருத்துக்கு சான்றாக,

'ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,
எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என….[5]

இப்பாடலில் பசு, பசுப் போன்ற இயல்புடைய பார்ப்பனர், பெண்டிர், நாள்பட்ட நோய் உள்ளவர், இறந்த முன்னோருக்குக் கடன் செலுத்துபவர், குழந்தைப்பேறு இல்லாதவர் ஆகியோர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுங்கள். இங்கே என் அம்பு பாயும் போர் நிகழவிருக்கிறது என்று அறவழி கூறியபின் போரிடும் பாங்குடையவர்கள் நம்முன்னோர்கள்.

கொடை

ஈகை என்பது இல்லாதவர்களுக்குப் பொருள் அளவில்லாமல் வாரி வழங்குவதாகும். அரசர்கள்,செல்வந்தர்கள் மட்டுமே கொடையாளர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை,மாறாக பிறருக்கு தன்னால் இயன்றதை கொடுக்கக்கூடிய மனம் உடைய அனைவருமே கொடை வள்ளல்தான்.கடையெழு வள்ளல்களில் ஒருவனான பாரி என்னும் அரசன் முல்லைக்கொடி வாடுகிறதே என்று தேரைக் கொடுத்தான். இந்தத் தன்மையை கொடைமடம் என்று எனக் குறிப்பிடுவர். கொடுப்பவன் தன் தகுதியும் உள்ள உயர்வும் புலப்படக் கொடுக்கும்போது கொடைப்பொருளும் உயர்ந்ததாகி விடுகிறது. இவ்வாறே ஒரு மழைக்காலத்தில் மயில் குளிரில் உலாவிக் கொண்டிருந்தபோது அது குளிரில் வருந்துவதாகக் கருதி ஓர் அழகிய போர்வையைக் கொடுத்தானாம் மற்றொரு வள்ளலான பேகன். ஒரு தேரையும் போர்வையையும் கொடுத்த இந்த வள்ளல்களின் செயல்களிலிருந்து கொடைப் பண்பின் பெருமையை உணரலாம், ஒரு கொடியும் பறவையும்கூடத் துன்பப்படக்கூடாது என்று அவர்கள் நினைத்தார்கள் என்றால் அரசர்களாகிய அவர்கள் தம் ஆட்சியில் மக்களை எப்படிக் காப்பாற்றியிருப்பார்கள் என்பதை இவ்வுலகம் அறியும். உண்டாரை நெடுங்காலம் வாழவைக்கக்கூடிய நெல்லிக்கனியை அதியமான் ஔவையாருக்குக் கொடுத்தான். ஆய் வள்ளல் தன்னை நாடி வந்த பரிசிலர்களுக்கு யானைகளைத் தந்தான். காரி என்பவன் எந்த நேரத்திலும் எளியவர்களுக்குப் பெரும்பரிசில்கள் தந்தவன். ஓரி தன்னை அடையாளம் தெரியாதவர்களிடம் தன் பெயரையும் சொல்லாமல் பொன்னையும் மணியையும் பரிசில்களாகத் தந்தவன். நள்ளி என்பவன் தான் இன்னார் என்று பிறரிடம் தெரிவிக்காமல் பிறருக்கு வேண்டியன எல்லாம் கொடுத்து விருந்தோம்பியவன். இத்தகைய

வள்ளல் தன்மை பண்பு நமது பண்பாட்டின்அடையளாமாக இன்றளவும் திகழ்கின்றது.

முடிவுரை

தமிழர்கள் தம் வாழ்வில் இயல்பாக கொண்டிருந்த பழக்க வழக்கங்கள் பண்பாடாக மாறி உலகத்தவர் அனைவரும் பின்பற்றத்தக்க உயந்த சிந்தனைகளாக மாற்றம் பெற்றமையை மேற்கண்ட சங்க இலக்கியச் சான்றுகள் சிலவற்றின் மூலம் அறியலாம். சங்க இலக்கியங்களில் காணலாகும் தமிழர் பண்பாடுகள் பல இன்றும் உலகம் பேற்றும் பொதுமைச்சிந்தனையாக இருப்பதை எண்ணி பெருமிதம் கொள்வோம்.

மேற்கோள்கள்


1. புறம்.பாடல் – 192.
2. ஐந்திணை ஐம்பது,பாடல் – 38.
3. புறம்.பாடல் – 333
4. நாலடியார்,பாடல் – 2
5. புறம்.பாடல் – 9


********* ********* ********** ********* ********* ********** ********** **********